இதழ் -3

# Gospel Truth

# காஸ்பல் ட்ரூத்

**உலகளாவிய திருச்சபைகளின் ஊக்குவிப்பிற்கான வேதாகம விளக்கங்கள்**

For Private Circulation Only

## உன் இருதயத்தை எனக்குத் தா


(மாற்கு 10 : 17 - 23 ; லூக் 18 : 18-24)

சூரியன் அஸ்தமித்தபோது, இயேசுவும் அவருடைய சீஷர்களும் தேசத்தின் எல்லைகளில் வந்தனர். மிகுந்த ஜனக்கூட்டம் இயேசுவை சூழ்ந்து நின்று கொண்டிருந்தார்கள்.

திடீரென ஐசுவரியவானாகிய ஒருவன் ஓடிவந்து அவருக்கு முன்பாக முழங்காற்படியிட்டு "நல்ல போதகரே நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ளும்படி நான் என்ன செய்ய வேண்டும்" என்று கேட்டான்.

அதற்கு இயேசு "நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனுமில்லையே. விபசாரஞ் செய்யாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக, வஞ்சனை செய்யாதிருப்பாயாக, உன் தகப்பனையும், உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்கிற கற்பனைகளை அறிந்திருக்கிறாயே" என்றார். அதற்கு அவன் "போதகரே இவைகளையெல்லாம் என் சிறுவயதுமுதல் கைக் கொண்டிருக்கிறேன்" என்றான்.

இயேசு அவனைப் பார்த்து அவனிடத்தில் அன்புகூர்ந்து "உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு. நீ போய் உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்று, தரித்திரருக்குக் கொடு. அப்பொழுது பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும். பின்பு சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றி வா" என்றார். அவன் மிகுந்த ஆஸ்தியுள்ள வனாயிருந்த படியால், இந்த வார்த்தையைக் கேட்டு, மனமடிந்து துக்கத்தோடே போய்விட்டான்.



**நற்பண்புகளும் நன்னடத்தையும் நித்திய ஜீவனைப் பெற்றுத் தராது**

அப்பொழுது இயேசு சுற்றிப் பார்த்து, தம்முடைய சீஷரை நோக்கி, "ஐசுவரியமுள்ளவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிதாயிருக்கிறது" என்றார்.

இயேசுகிறிஸ்து மிகுந்த வருத்தத்தோடு அந்த இளைஞனைப் பார்த்து, அப்புறம் நடந்து சென்றார்.

இயேசுகிறிஸ்து இந்த மனிதனின் நற்பண்புகளையும் நன்னடத்தையும் அறிந்திருந்தபோதிலும் கூட இவைகளால் அவன் பரலோக ராஜ்யத்தை சுதந்தரிக்க முடியாது என விளக்குகிறார். இந்த உலகத்தின்பால் கொண்டுள்ள மற்றெல்லா அன்பைக் காட்டிலும் அதிகமாய் முழு இருதயத்தோடு கர்த்தரிடத்தில் அன்புகூருவாயாக

அவன் உலக ஆஸ்திகளை நோக்கும்போது, இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுவதில் தயக்கம் காட்டுகிறான். இதன்மூலம் இயேசுகிறிஸ்துவை பின்பற்றுவதற்கு என்ன அடித்தளம் வேண்டும் என்று விளக்குகிறார்

நற்பண்புகளும் நன்னடத்தையும் மாத்திரமே ஒருவன் நித்திய வாழ்வு பெற போதுமானதல்ல. ஆனால் இவையெல்லாம் நம்மை கர்த்தரிடத்தில் நெருங்கி சேர வழி வகுக்கிறது.

நாம் இயேசுவின் மீது அன்புள்ள வர்களாயிருக்கலாம். நாம் நல்ல துணையாக இருக்கலாம், நல்ல குடிமகனாக, நல்ல அண்டை வீட்டுக்காரராக இன்னும் அநேக காரியங்களில் கூட

என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா; உன் கண்கள் என் வழிகளை நோக்குவதாக (நீதி 23 : 26)


| தலையங்கம் | வேதாகம வழிகாட்டி | வேத வாசிப்பு | கேள்விக்கென்ன பதில் | உங்களுக்குத் தெரியுமா/ |
|---|---|---|---|---|
| பக்கம் - 3 | பக்கம் - 4 | பக்கம் - 5 | பக்கம் - 7 | பக்கம் - 8 |

## வேதாகமம்

### நமக்கு போதிப்பது என்ன.....

**தேவனுடைய வார்த்தை**
2 தீமோ 3 : 16-17 ; 2 பேது 1 : 20-21 ;
மத் 24 : 35

**அன்பு**
மத் 22 : 37-40 ; யோவா 14 : 21-23,
1 யோவா 4 : 7-11

**மனந்திரும்புதல் :**
அப் 3 : 19 ; 17 : 30 ; 2 கொரி 7 : 10

**புதுசிருஷ்டி**
யோவா 3 : 3-7 ; 2 கொரி 5 : 17 ; ரோம 6 : 1-4,
எபே 2 : 1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**
1 யோவா 5 : 18 ; மத் 1 : 21 ; யோவா 8 : 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**
அப் 1 : 8 ; 15 : 8-9 ; 19 : 2

**பரிசுத்தம் :**
லூக் 1 : 73-75 ; எபி 12 : 14 ; 1 பேது 1:15-16 ;
தீத்து 2 : 11-12 ; ரோம 6 : 22

**தேவனுடைய இராஜ்யம்**
லூக் 17 : 20-21 ; ரோம 14 : 17 ; யோவா 18 : 36.

**சபை-** அப் 2 : 47 ; எபே 4 : 4-6 ;
1 கொரி 12 : 12-13 ; கொலோ 1 : 18

**ஒற்றுமை**
யோ 17 : 20-23 ; கலா 3 : 28 ;
வெளி 18 : 2-4 ;

**நியமங்கள்**
மத் 28 : 19-20 ; 26 : 26-30 ;
1 கொரி 11 : 23-27 ; யோவா 13 : 14-17

**தெய்வீக சுகமளிப்பு**
லூக் 4 : 18, ஏசா 53 : 4,5, யாக் 5 : 13-16

**விவாக முறைமை**
மத் 19 : 5-6 ; லூக் 16 : 18 ; ரோம 7 : 2-3 ;
1 கொரி 7 : 10, 11 ;

**வெளிப்புற தோற்றம்**
1 தீமோ 2 : 9-10 ; 1 கொரி 11 : 14-15 ;
உபா 22 : 5

**கடைசிகாலம்**
2 பேது 3 : 7-12 ; யோவா 5 : 28, 29 ;
2 கொரி 5 : 10 ; மத் 25 : 31-46

**தொழுதுகொள்ளுதல்**
யோவா 4 : 23, 24 ; எபே 5 : 19 ;
2 கொரி 3 : 17 ;

**சுவிசேஷம் அறிவித்தல்**
மாற் 16 : 15 ;

மனுக்குலத்திற்காக **கர்த்தராகிய இயேசுகிறிஸ்து**வின் ஏக்கம் இதுவே உன் இருதயத்தை எனக்கு தா.நாம் இயேசுவை நேசிக்க ஆரம்பித்து விட்டால், முழுவதுமாய் நம் இருதயத்தை கர்த்தரிடத்திற்கு திருப்பிவிடலாம்.அது மாத்திரமல்ல, முழு பெலத்தோடும் முழு ஆத்துமாவோடும் அவரிடத்தில் அன்பு கூருவோமாக. நம்முடைய நேரம், பணம், கனவு, ஆசை திட்டங்கள் எல்லாவற்றிலும் தேவனுக்கே முதலிடம் கொடுக்கிறவர்களாய் மாறி விடுவோம்.

இந்த ஆஸ்தியுள்ள இளைஞனைப் போலத்தான் இன்றும் உலகில் அநேகர் பரலோகத்தை தேடுகிறார்கள். சிலர் இயேசுவுக்கு முழுவதுமாய் அன்பு செலுத்துவதில் மனதில்லாதவர்களாய் இருக்கிறார்கள்.மற்றவர்களில் பலர் சபை அங்கத்தினராய், பாடுவதிலும் , ஜெபிப்பதிலும், கற்றுக் கொடுப்பதிலும் ஏன் சில சமயம் போதிப்பதிலும் ஆர்வமுள்ளவர்களாய் இருப்பார்கள்.ஆனால் இவர்களும் கர்த்தருக்கு கொடுக்க வேண்டிய அந்த ஒன்றை (தன் இருதயத்தை) கொடுக்காமல் அன்பில் தடைபடுகிறார்கள்.

இன்று உங்கள் அன்பு எங்கே இருக்கிறது? ஒன்றில் நீங்கள் குறைவுபட்டிருக்கிறீர்களா? உங்கள் இருதயத்தை அவருக்கு கொடுங்கள்.அவருக்காக நீங்கள் எவைகளையெல்லாம் விட்டுவிடுகிறீர்களோ அதற்கான பலன் இம்மையில் மாத்திரமல்ல, வரப்போகும் மறுமைக்கான வாழ்விலும் **கர்த்தராகிய இயேசுகிறிஸ்து** உங்களுக்குத் தருவாராக.

## காஸ்பல் ட்ருத்

கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம்.கிறிஸ்துவின் நாட்கள் தொடங்கி அப்போஸ்தலர்கள் காலமட்டும் பிரசங்கித்து வந்த கிறிஸ்துவின் சத்தியத்தையே நாங்களும் இந்த இதழ் வாயிலாக அறிவிக்கிறோம்.

கர்த்தரின் வசனமே விசுவாசத்திற்கு ஊன்றுகோலாகும்.அதுவே பாவமன்னிப்பின் நிச்சயத்தையும், இரட்சிப்பையும் நமக்குத் தருகிறது.பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலும், வல்லமையும், அனுதின வாழ்வின் பரிசுத்தமும் நம்மில் வளர வழி வகுக்கிறது.சத்தியத்தின்படி அன்பை போதித்து கர்த்தருக்குள் வழி நடத்த பிரயாசப்படுகிறோம்.

## இணையதள சேவை

எங்களுடைய இந்த இதழை ஆன்லைனில் படிக்க ***www.thegospeltruth.org*** என்ற இணையதள முகவரியை பார்க்கவும்.மேலும் உங்களது ***E.mail*** மூலமாகவும் எங்களோடு தொடர்பு கொள்ளலாம்.உங்களது நண்பர்கள் மற்றும் தெரிந்தவர்களுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.

## தொடர்புக்கு

தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள். தேவ சபையின் மூலமாய் நடைபெறும் அனைத்து வகையான ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.உங்களது கருத்துக்களை எதிர்பார்க்கின்றோம்.

**ஆசிரியர்.டபிள்யூ.எஸ்.வேதா, காஸ்பல் ட்ருத், 2/227 - கோலார்பட்டி பொள்ளாச்சி வட்டம், தென் இந்தியா - 642 107**



# தலையங்கம்

“கர்த்தர் என் சத்தத்தையும் என் விண்ணப்பத்தையும் கேட்டதினால், அவரில் அன்பு கூருகிறேன்.அவர் தமது செவியை எனக்குச் சாய்த்தபடியால் நான் உயிரோடிக்குமளவும் அவரைத் தொழுது கொள்ளவேன்” (சங் 116 : 1– 2).

நான் சிறுவனாயிருக்கும்போதே, என் இருதயத்தைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, என் நம்பிக்கையை அவர்மேல் வைத்து அவரை என் ஆதாரமாகக் கொண்டேன்.பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலுக்காக நான் தெளிவாக அழுது ஜெபித்தேன்.கர்த்தாவே நீர் என் இருதயத்துக்குள் வாரும் என்று ஞாயிறு பாடசாலை வகுப்பிலே என் தாயாருடன் சேர்ந்து ஜெபித்திருக்கிறேன்.நான் பாவத்தின் ஆழத்தில் இல்லாதபோதும் கூட, கர்த்தருடைய இரக்கத்திற்காக வைராக்கியமாய், வாஞ்சையாய் ஜெபிப்பதுண்டு.நான் மேலும் வளர்ந்து, பெரியவனானபோது, வளர்ந்து வரும் ஆத்ம பாரத்தையும், ஆவியில் என் பெலவீனங்களையும், சில தோல்விகளையும் சந்திக்க நேர்ந்தது.ஆனாலும் நான் ஒருபோதும் கர்த்தருக்குச் சேவை செய்வதையும், என் வாஞ்சையையும் விடவில்லை.கர்த்தராகிய தேவன்பால் நான் கொண்ட விசுவாசத்திற்காக நான் அவரை ஸ்தோத்தரிக்கிறேன்.

என் நம்பிக்கையற்ற சில சூழ்நிலைகளினிமித்தம் நான் வழி தவறி சென்று விடாது காக்கும்படி கர்த்தரிடத்தில் அனுதினமும் ஜெபிப்பதுண்டு.நான் **கர்த்தராகிய இயேசுகிறிஸ்து**வை நேசிக்கிறேன்.அவரில் நான் பிரியமாயிருக்கிறபடியால் அவரது பிரசன்னத்தை உணர்கிறேன்.என் விண்ணப்பங்களுக்கு பதிலளிக்க அவர் வல்லமையுள்ளவர்.என் தழும்புகளை குணமாக்கினார்.மரணத்தின் பிடியிலிருந்து என்னை காப்பாற்றினார்.அழகான ஒரு குடும்பத்தை எனக்கு கொடுத்திருக்கிறார்.அனுதினமும் போஷிக்கிறார்.எல்லாவற்றிற்கும் மேலாக என் ஆத்துமாவை அடிமைத்தனத்திலிருந்தும், பாவப்பிடியிலிருந்தும் விலக்கி மீட்டார்.தேவ பிரசன்னத்தை கர்த்தர் கொடுத்திருக்கிறார்.என் வாழ்வில் நன்மைகளை செய்த தேவாதி தேவனுக்கு கோடான கோடி நன்றிகளை செலுத்துகிறேன்.

நாம் அவரில் பிரியமாயிருக்கும்போது, அதுவே விலையுயர்ந்த பொக்கிஷமாக நான் எண்ணுகிறேன்.இந்த **காஸ்பல் ட்ரூத்** இதழானது அன்பு எனும் கர்த்தரின் கட்டளையை போதிக்கிறது. இந்த புதிய ஆண்டிலும் கர்த்தர் மேலுள்ள விசுவாசத்தில் இன்னும் உறுதியாய் தரித்திருங்கள்.கடந்த நாட்களில் கர்த்தர் உங்களை நடத்தி வந்த பெரிய தயவுக்காக நன்றியுள்ளவர்களாய் ஜெபத்திலே காத்திருங்கள்.விசுவாசத்தில் உறுதியாயிருங்கள்.உங்கள் கண்கள் அவரையே நோக்குவதாக.புதிய வெற்றி வாய்ப்புகள் உங்களுக்காக கர்த்தர் வைத்திருக்கிறார்.அவரை விடாமல் பற்றிக் கொண்டிருங்கள்.ஒருநாள் தேவனோடு நீங்களும் பரலோக ராஜ்யம் பெறுவீர்கள்.

இன்னும் அநேக வருடங்கள் கர்த்தருடைய ஊழியத்தை தொடர்ந்து செய்யக் கூடிய கிருபைகளையும், ஆசீர்வாதங்களையும் தேவன்தாமே நமக்குத் தருவாராக

உலகமெங்கிலும் இந்த **காஸ்பல் ட்ரூத்** என்ற இதழை படிக்கிற ஒவ்வொருவருக்கும் அது உற்சாகத்தையும், ஊக்கத்தையும் தர வேண்டும் என்று நான் ஜெபித்துக் கொள்கிறேன்.இது உங்களுக்கு ஆசீர்வாதமாக இருப்பின் எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்

அவருடைய மகிமையினாலே இந்த வருடம் முழுவதும் நாம் அநேக நன்மைகளை காண்போம், அவருடைய மெய்யான ஒளியிலும், பரிசுத்தத்திலும், சமாதானத்திலும் நாம் நடப்போமாக

**ஆன்லைனில்**

**அதிகமாக தெரிந்துகொள்ள**

*www.thegospeltruth.org*



### தேவன் மீது நாம் கொண்ட அன்பை எப்படி தூண்டலாம்

**மனந்திரும்புங்கள்**

உங்களின் மெத்தனமான போக்கையும் வாஞ்சையற்ற தன்மையையும் ஒப்புக்கொண்டு தேவனிடத்திற்கு மனந்திரும்புங்கள்.சங் 51:12

**கர்த்தரைத் தேடுங்கள்**

விடாமுயற்சியோடு வேதத்தை வாசித்து தியானிக்கப் பழகுங்கள்.சத்திய வழியின் மேல் தாகத்தையும், வாஞ்சையையும் தரும்படி கர்த்தரிடத்தில் கேளுங்கள்.

**கீழ்ப்படியுங்கள்**

கர்த்தரிடத்திலிருந்து உங்களை விலகச் செய்கிற காரியங்களை விட்டு விடுங்கள்.கீழ்ப்படிதலே எல்லாவற்றிற்கும் மேலானது.

**ஐக்கியத்தில் கலந்துகொள்வதை கைவிடாதிருங்கள்**

துதி ஆராதனைகளில் கலந்துகொள்ள தயங்காதீர்கள்.கர்த்தருடைய ஆலயத்திற்கு வரும்போது தான் எல்லா உலகக் கவலைகளையும் மறந்து அவரை மட்டும் நோக்கிப் பார்க்க முடியும்

**மற்றவர்களுக்கு உதவுங்கள்**

ஆவிக்குரிய வாழ்விலே சோம்பலாக இருக்கக் கூடாது.சுயநலம் உங்களை மேற்கொள்ளவொட்டாமலும் இருங்கள்.கர்த்தரிடத்தில் கேளுங்கள். எவ்வாறு நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கு உதவி செய்யலாம் என்று

**இரட்சிப்பின் சந்தோஷத்தை பெற்று அனுபவியுங்கள்**

கர்த்தருடைய ஆசீர்வாதங்களுக்காக நன்றியுள்ள இருதயத்தோடு வாழுங்கள்.நீங்கள் செய்கிற ஒவ்வொரு காரியங்களிலும் கர்த்தரின் அன்பை வெளிப்படுத்துங்கள்.

# வேதாகம வழிகாட்டி

## பொருள் : வேதவாசிப்பு

**வேத வாசிப்பு**

1 யோவான் 4 : 16-17 தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம்.தேவன் அன்பாகவே இருக்கிறார்.அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான்.தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்.

நியாயத்தீர்ப்பு நாளிலே நமக்குத் தைரியமுண்டாயிருக்கத்தக்கதாக அன்பு நம்மிடத்தல் பூரணப்படுகிறது.ஏனென்றால் அவர் இருக்கிறபிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம்.

**அன்பு - வரையறை**

அன்பு, கருணை, தொண்டு, இணைப்பில் உறுதி

**I.மனிதர்மேல் கடவுளின் நினைவுகள்**

A.எரேமியா 31 : 3 அநாதி சிநேகத்தால் உன்னை சிநேகித்தேன்

B.எரேமியா 29:11-13 சமாதானத்துக்கேதுவான நினைவுகளே

**II.கர்த்தர் மனிதர்களோடு தொடர்பு கொள்ள கொண்ட வாஞ்சை**

A.ஆதி 3 : 8-9 அநாதி சிநேகத்தால் உன்னை சிநேகித்தேன்

B.வெளி 3 : 20 இதோ வாசற்படியில் நின்று தட்டுகிறேன்

C.2கொரி 5 : 17-18 தேவனோடு ஒப்புரவாகுதல்.

**III.கர்த்தர் யாரை நேசிக்கிறார்**

A.யோவான் 3:16 உலகத்தில் அன்புகூர்ந்தார்

B.ரோமர் 5:8 பாவிகள்மேல் கிறிஸ்து அன்புகூர்ந்தார்

C.எபே 5 : 25 கிறிஸ்து சபையில் அன்புகூர்ந்தார்

**IV.கிறிஸ்துவின் அன்பின் வெளிப்பாடு**

A. 1 யோவான் 4 : 9-10 தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்கு, இவ்வுலகத்தில் அனுப்பினார்.

B.1 யோவான் 3 : 1,16 தேவனின் மாறாத அதே அன்பு.

**V.அன்பே பிரதான கட்டளை**

A.உபாகமம் 10 : 12 அன்பே பிரதானம்

B. மத் 22 : 36-38 உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் அன்பு கூருவாயாக

C.1 கொரி 13 : 1-3 அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை

**VI.அன்பு தெய்வீக அனுபவம்**

A.1 யோவான் 4 :7-8 தேவன் அன்பாகவே இருக்கிறார்

B. ரோமர் 5 : 5 தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது

**VII.அன்பின் கிரியை**

A. 1 யோவான் 3:18 கிரியையினாலும், உண்மையினாலும் அன்பு கூரக் கடவோம்

B. மத் 15 : 8 இந்த ஜனங்கள் தங்கள் உதடுகளினால் என்னை கனம் பண்ணுகிறார்கள்

**VIII.அன்பை வெளிப்படுத்துதல்**

A.யோவான் 14:15,23-24 ஒருவன் என்னில் அன்பாயிருந்தால் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான்

B. 1 யோவான் 5 :3 நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்து அவருடைய கற்பனைகளை கைக்கொள்ள வேண்டும்.

C. 1 யோவான் 4:20-21 தேவனிடத்தில் அன்புகூறுகிறவன் தன் சகோதனிடத்திலும் அன்புகூர வேண்டும்.

**IX.உலகத்திலும், தேவனிலும் அன்பு கூருவது முடியாதது**

A.மத் 6 :24 இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது.

B. 1 யோவான் 2 : 15-17 உலகத்திலும் உலகத்திள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்

C.உபாகமம் 13 :3 தேவன் நமது அன்பை சோதிக்கிறார்.

**X.மாயமற்ற அன்பின் தன்மைகள்**

A. 2 கொரி 6 :6 மாயமற்ற அன்பிலும்

B. 2 கொரி 8 :8 உண்மையான அன்பு

C. 1 தீமோ 1:5 சுத்தமான இருதயம்

**XI.அன்பில் பூரணப்படுங்கள்**

A. எபேசியர் 3 : 17-19 தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும்

B. யோவான் 15 : 10-11 என்னுடைய சந்தோஷம் உங்களில் நிறைந்திருக் கும்படிக்கு.

**XII.அன்பின் வல்லமை**

A.1 யோவான் 4 :18 பூரண அன்பு பயத்தை புறம்பே தள்ளும்

B.2 கொரி 5 : 14-15 கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது

**XIII.தேவனிடத்திலிருந்து மனிதனை பிரிப்பது எது**

A.ரோமர் 8 :35 கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்

B.2 யோவான் 14 : 23-24 என்னில் அன்பாயிராதவன் என் வசனங்களை கைக்கொள்ள மாட்டான்

**XIV.அன்பு தணிந்து போகுதல்**

A.மத்தேயு 24 :12 அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம்

B.வெளி 2 : 4 நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய்

C.வெளி 3 :15-17 நீ குளிருமல்ல அனலுமல்ல

**XV.இயேசு கிறிஸ்துவில் அன்பு கூருகிறவர்களுக்கு வெகுமதி**

A.யாக்கோபு 2 :5 ராஜ்யத்தைச் சுதந்தரிக்கிறவர்களாகவும்

B.2 தீமோ 4 : 7-8 நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது.

# கர்த்தரின் பெரிய விருப்பம்

## ஒருநோக்கு வேதாகம செய்தி

**மனுக்குலத்தின் மீது கர்த்தரின் நோக்கம்**
இந்த உலகம் உண்டானது முதல் கர்த்தர் மனிதனோடு உள்ள உறவில் ஐக்கியப்பட வாஞ்சையுள்ளவராக இருக்கிறார் (ஆதி 3 : 8-9). பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள்.அப்பொழுது ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக் கொண்டார்கள்.
வேதாகமமானது வரலாற்று நூலாகவும், இறையியல் நூலாகவுமல்லாது, பிரதானமாக கர்த்தர் மனுக்குலத்தின் மீது கொண்ட வாஞ்சைக்கும், அன்பின் உறவாடுதலுக்கும் ஆதாரமாய் விளங்குகிறது.

**மனுக்குலத்தின் பாவம் கர்த்தரோடுள்ள தொடர்பை துண்டிக்கிறது**
கர்த்தராகிய தேவன் மனிதர்களை படைத்ததன் நோக்கம், அவரது வாஞ்சை அவனோடு உறவாடி, அன்பு காட்டவே.இது கட்டாயத்தின் பேரிலோ அல்லது வற்புறுத் தலினாலோ அல்ல.அன்பினால் உறவுகளை ஒருமனப்படுத்தவே அவர் வாஞ்சித்து, மனிதனை உண்டாக்கினார்.ஆதாமும், ஏவாளும் பாவஞ்செய்ததின் நிமித்தமாக தேவனுடைய தொடர்பிலிருந்து துண்டிக்கப்பட்டு,



அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டார்கள்.இதனால்தான் பாவம் என்பது ஒரு மனிதனை கர்த்தராகிய தேவனுடைய தொடர்பிலிருந்து பிரிக்கிறது.ஒருவனை அவன் பாவத்திலே மரித்துவிடும்படி விட்டுவிட அவர் அநீதியுள்ளவரல்லவே

**தேவன் தம் ஒரே பேறான குமாரனை சமாதானத்திற்காக உலகத்திற்கு அனுப்பினார்.**
தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்தய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்

அவர் அன்பைப் போதித்தார்.அன்பாகவே இருந்தார் விலையேறப்பெற்ற அன்பை அவர் இன்று நமக்கு அருளியிருக்கிறார்.பூர்வகாலமுதல் கர்த்தர் எனக்குத் தரிசனமானார் என்பாய் : ஆம் அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்.ஆதலால் காருணியத்தால் உன்னை இழுத்துக் கொள்ளுகிறேன் (எரேமியா 31:3).

**கர்த்தரின் செய்கைகளில் அன்பு**
தேவன் அன்பாகவே இருக்கிறார்.(1யோவான் 4 :8) சிலர் கர்த்தரை கடினமுள்ள தலைவராக எண்ணுகிறார்கள். இது சாத்தானின் எண்ணமாயிருக்கிறது.கர்த்தராகிய தேவன் அன்பான தேவன் . நம் வாழ்வின் எல்லா காரியங்களிலும்

கண்ணோக்கமாயிருக்கிறார்.ஒருவன் எந்த சூழ்நிலையில் இருந்தாலும் நேசிக்கிற சுபாவம் அவருடையது.அந்த அன்புக்கு ஈடாக நாம் எதுவுமே செய்ய முடியாது.நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார். (ரோமர் 5 : 8).

**நாம் திரும்ப செலுத்தும் அன்பினால் அது பூரணமாகிறது**
தேவன் நம்மில் அன்பு கூர்வது போல, நாமும் அவரில் அன்பு கூறக்கடவோம்.முழு இருதயத்தோடு நாம் அவரை நேசிக்கும்போது தேவனுக்கும், மனிதனுக்கும் உள்ள அன்பு பூரணமாகிறது. நியாயசாஸ்திரி ஒருவன் அவரை சோதிக்கும்படி, “போதகரே நியாயப்பிரமாணத்திலே எந்த கற்பனை பிரதானமானது என்று கேட்டான்.இயேசு அவனை நோக்கி: உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு மனதோடும் அன்பு கூருவாயாக. இது முதலாம் பிரதான கற்பனை” (மத் 22 : 36-38). இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் அடங்கியிருக்கிறது. பலர் மனிதர்கள் பயத்தினாலும், பக்தியினாலும் சபைகளில் மாத்திரம் ஆராதிக்கிறார்கள்.ஆனால் அன்பினால் தேவனை ஆராதிக்கும்போது தான் பரிபூரணமான உறவு மேம்படுகிறது.உண்மையான சந்தோஷமும், சமாதானமும் நம் உள்ளத்தில் வருகிறது.

**உண்மையான அன்பை வற்புறுத்தலினால் அடைய முடியாது**
ஒரு மனிதன் தன் மனைவியை சங்கிலிகளினாலே தினமும் கட்டி சமையலறையில் அடைத்து வைத்துவிட்டு வேலைக்குச் செல்வான்.அவள் தன்னிடத்தில் வரக் கூடாது என்று அவன் பயப்படுகிறான்.அவர்களுடைய உறவானது பயத்தையும், அடிமைத்தனத்தையுமே காட்டுகிறது.மனைவியை உண்மையாக நேசிக்கிற ஒரு கணவன் தான் திரும்பி வந்து மனைவியைக் கண்டு சந்தோஷப்படாமல் பயத்தோடு வாழ்வது நல்லதல்ல.கர்த்தராகிய தேவனுடைய அன்பானது பயத்தை புறம்பே தள்ளும்.

கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது.ஏனென்றால் எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள் என்றும், பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல் தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம் (2 கொரி 5 : 14)

**கீழ்படிதலினாலே அன்பை வெளிப்படுத்தினார்**

இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள்.அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது ( மத் 15 : 8) உண்மையான அன்பை வெறும் வார்த்தையால் வெளிக்காட்ட முடியாது.இயேசு கூறுகிறார் ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான்.அவனில் என் பிதா அன்பாயிருப்பார்.நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம் (யோவான் 14 : 23). இதுவே உண்மையான அன்பின் வெளிப்பாடு.இந்த உலகில் பலர் கிறிஸ்தவர்களாய் நடிக்கிறார்கள்.சிலர் மாத்திரமே கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடக்கிறார்கள்.கீழ்படிதல் இல்லாவிட்டால் அன்பும் இருக்காது.கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? ( ரோமர் 8 : 35 ). கீழ்ப்படியாமை மாத்திரமே (யோவான் 14 : 23 -24).



இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது (மத் 6 : 24). பாவ வழியில் ஒருபோதும் தேவனோடு உள்ள உறவில் வளர முடியாது.ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை.
(1யோவான் 2 : 15 – 17).

**அன்பு தியாகம் செய்யும்**

இருவர் உண்மையாக அன்பு செலுத்தும்போது அவர்களுடைய நேரத்தையும், திறமையையும் மற்றவர்களுக்காக செலவிட ஆர்வமுள்ளவர்களாய் காணப்படுவார்கள்.இதுதான் கர்த்தரோடுள்ள உண்மையான இருதயத்தைக் காட்டுகிறது.அன்பின் நிறைவினால் நாமாகவே கர்த்தரைத் துதிக்கவும், ஆராதனை செய்யவும் ஆரம்பித்து விடுவோம்.கீழ்ப்படிதலும் அன்பின் ஒரு வடிவம். அன்பு சந்தோஷத்தையும், மன திருப்தியையும், பலத்தையும் கொண்டு வரும்.

**தேவனிடத்தில் அன்புகூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்புகூருவான்**

நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால் அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது (ரோமர் 5 : 5).

தேவனிடத்தில் அன்பு கூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன், தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான் (1யோவான் 4 : 20, 21).

**தேவ அன்பு நித்திய வாழ்வுக்கு உறுதியளிக்கிறது**

தேவனிடத்தில் நாம் செலுத்துகிற அன்பானது சமாதான சந்தோஷத்தை மாத்திரமல்ல நித்திய வாழ்வையும் நமக்குத் தரும். இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது.நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்.எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார் (2 தீமோ 4 : 8).

**கர்த்தரின் பெரிய விருப்பம்**

கர்த்தர் அனுதினமும் நம்மோடு உறவாடுகிறவர்.கர்த்தர் உங்கள் வாழ்வின் ஓர் அங்கமாக ஒருங்கிணைந்து வாழ விரும்புகிறார். அவர், நீங்கள் அவரோடு உங்கள் நேரத்தை செலவிட விரும்புகிறார்.இதன்மூலம் ஓர் உன்னதமான ஐக்கியம் வலுப்படும்.அன்பின் அடித்தளத்தின் மீது நம் வாழ்வின் உண்மையான தோற்றம் விளங்கும்.

**உங்கள் தேவனாகிய
கர்த்தரிடத்தில்
நீங்கள் உங்கள்
முழு இருதயத்தோடும்
உங்கள் முழு ஆத்துமாவோடும்
அன்புகூருகிறீர்களோ
இல்லையோ
என்று அறியும்படிக்கு
உங்கள்
தேவனாகிய கர்த்தர்
உங்களைச் சோதிக்கிறார்
நீங்கள் உங்கள்
தேவனாகிய
கர்த்தரைப் பின்பற்றி,
அவருக்குப் பயந்து
அவர் கற்பனைகளைக்
கைக்கொண்டு
அவர் சத்தத்தைக் கேட்டு,
அவரைச் சேவித்து,
அவரைப் பற்றிக்கொள்வீர்களாக
உபாகமம் 13 : 3 4**

# கேள்விக்கு என்ன பதில்?

**கேள்வி :** நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய்? என்பதன் அர்த்தம் என்ன?

**பதில் :** இந்த கேள்வி வெளி 2 : 4 ஐ மேற்கோள் காட்டுகிறது. ஆனாலும், நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன் பேரில் எனக்கு குறை உண்டு. ஆவியானவர் **எபேசு** சபைக்கு பேசின வார்த்தை இது.

இந்த சபையானது பிசாசுக்கு எதிர்த்து நின்று நன்மையானவைகளை கைக்கொண்டு வாழ்ந்த சபையாக திகழ்ந்தது. வேத சத்தியங்களுக்கும், கோட்பாடுகளுக்கும் கீழ்படிந்து நடந்து கொண்ட போதிலும், இந்த எபேசு சபையானது வலுமையான பக்தி வைராக்கியத்தையும் கர்த்தருடைய ஐக்கியத்தையும் முன்பு தாம் இருந்தது போல அனுபவிக்கவில்லை. இதனை JFB விளக்கவுரையில் இவ்வாறு கூறப்படுகிறது. அவர்களுடைய அன்பின் அரவணைப்பானது வழிவழியாக வரும் மதக் கோட்பாடுகளில் மாத்திரம் நம்பிக்கையுடையவர்களாக மாற்றியது.

தேவனுக்கும், மனிதனுக்குமான உறவை எப்போதும் வேதம் மணவாளனுக்கும், மணவாட்டிக்குமான உறவாக எடுத்துக் காட்டுகிறது. பொதுவாக, புதிதாக திருமணமான தம்பதிகள் தங்களுக்குள் உண்மையான ஆழ்ந்த அன்புடன் இருப்பார்கள். அவர்கள் ஒன்றாக நேரத்தை செலவிடுவார்கள் ஒருவருக்காக ஒருவர் தியாகம் செய்து வாழ்வார்கள். அவர்கள் திருமணம் என்பது வாழ்நாள் முழுமைக்குமான ஒரு பிணைப்பாகும்.

இதைப்போலவே பாவமுள்ள இந்த உலகத்தில் பல தம்பதியினர் அன்பின் ஈர்ப்பையும், ஆர்வத்தையும் இழந்து விடுகிறார்கள். இருவரும் இணைந்து ஒரே வீட்டில் வசித்தாலும், அவர்களிடத்திலே ஆழமான அன்பு இருக்காது. இதைப்போலத்தான் பலருடைய உறவும் தேவனோடு காணப்படுகிறது.

சிலர், புதிதாக இரட்சிக்கப்பட்ட அனுபவத்திற்குள் வரும் போது ஆச்சரியமான அமைதியையும், தேவனுடைய இரக்கத்தையும் கண்டு, அனுபவிப்பார்கள், தேவனுடைய உறவில் வலு குறையும் போது ஒன்று அந்த மனிதன் பின்வாங்கிப் போவான் இல்லையெனில் பக்திவைராக்கியம் இல்லாமல் சில விஷயங்களை தொடர்ந்து செய்து கொண்டிருப்பான். தேவ அன்பை இழந்தவர்கள் மனந்திரும்ப வேண்டும்.பல ஆவிக்குரிய சபைகளும், சபை விசுவாசிகளும் இன்று சாத்தானை எதிர்த்து நிற்கிறார்கள்.

**பலர் ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டுவிடுகிறார்கள்......**



**அவர்களுடைய நேரம், பலம், நோக்கம், எண்ணம், கவனம் அனைத்தும் மற்றவைகளையே நோக்கிக் கொண்டிருக்கிறது. கர்த்தராகிய தேவனை இரண்டாவதாகத்தான் எண்ணுகிறார்கள்.**

ஆனால் தாங்கள் இழந்து போன அந்த தேவனுடைய அன்பை நினையாதிருக்கிறார்கள்.தேவன் முதலாவதாக நம்மிடத்திலிருந்து எதிர்பார்ப்பது அன்பு மாத்திரமே

உணர்வுபூர்வமான தேவ அன்பு, உள்ளார்ந்த தூண்டுதலை ஏற்படுத்தும்.பாரம்பரிய கோட்பாடுகளை தமக்கு கிடைத்த கொள்ளைப் பொருளாக எண்ணிக் கொண்டு சோம்பலுடன் கடமைக்காய் தேவனைத் தேடாமல் அர்ப்பணித்து ஜெபிக்க வேண்டும். இப்படிப்பட்டதான வலுமையான தேவனுடனான உறவுக்கு சில நாட்கள் அல்லது சில காலங்கள் ஆகலாம்.ஏனெனில் உனக்குள்ளதை ஒருவரும் எடுத்துக்கொள்ளாதபடிக்கு அதைப் பற்றிக் கொண்டிருங்கள்.

அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்து போம் (மத் 24 : 12) பலர் தேவ அன்பை இழக்க காரணம், உலக அன்பிற்கு முக்கியத்துவம் தருவதுதான். பாரம்பரியமாக தேவனை தொழுது கொள்ளுகிறார்கள்.அதில் தேவஅன்பு இல்லை.அவர்களுடைய நோக்கம் கவனம் எல்லாமே உலகப்பொருளை, ஆதாயத்தைப் பற்றியதாகவே இருக்கிறது.

இப்படிப்பட்ட காரியங்களினாலே நாம் தேவஅன்பில் அசதியாயுள்ளவர்களாகவும், வைராக்கிய வாஞ்சையற்று சுவிஷேசத்தை நாடுபவர்களாகவும் காணப்படுகிறோம். அது ஒருவகையான தெய்வபக்தி மாத்திரமே.நம்மை நாமே சோதித்து ஆராய்ந்து உணர்ந்தோமானால் ஆதியில் நாம் தேவன்பால் கொண்ட அன்பை ஒருபோதும் ஒருவராலும் அசைக்க முடியாது.

நாம் ஒருபோதும் ஆதியில் கொண்டிருந்த அன்பை இழந்து போகக் கூடாது.கணவன் மனைவி இருவருமாக இணைந்து தங்களுக்கென்று நேரத்தை செலவிடுவதன் மூலமாகத்தான் அவர்களுடைய அன்பின் ஆழம் வெளிப்படுகிறது.அதைப் போலத்தான் தேவனுடனான நம்முடைய உறவும் இருக்க வேண்டும்.மிக முக்கியமான ஒன்று நாம் ஆதியில் கொண்டிருந்த அன்பை ஊக்கப்படுத்தும் வண்ணம் தேவ வசனத்தை வாசித்து, தியானித்து அன்றாடம் ஜெபித்து தேவனோடு உள்ள உறவிலே ஐக்கியப்பட வேண்டும்.நம் வாழ்வின் எல்லா காரியங்களிலும் தேவனுக்கு முதலிடம் தர வேண்டும்.தேவ அன்பே எல்லா நன்மையான ஈவுகளுக்கும் அடிகோலும்.

நம் அனுதின வாழ்வில் தேவனுடைய அபிஷேகத்தையும், சுவிசேஷ பணியையும் பெற்று அனுபவிக்கலாம்.இது தேவனுடைய கட்டளைகளையும், உண்மையான சந்தோஷத்தின் நிச்சயத்தையும் கொண்டு வரும்.

Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide
Indian Constitution Act 25th & 19(1) Section
TAMIL EDITION

உங்களுக்குத் தெரியுமா?

◆ **JEHOVAH ( YAHWEH)** எபிரேயு வேதாகமத்தில் கர்த்தரின் பெயர், வாழும் சுயமற்ற, மாறாத, நித்திய, படைத்த எல்லாவற்றிற்கும் மேலான தேவன்.

◆ **JESUS** என்றால் மீட்பர்

◆ **IMMANUEL** என்றால் தேவன் நம்மோடிருக்கிறார்

◆ **MESSIAH** என்ற எபிரேய வார்த்தைக்கு அபிஷேகம் என்று அர்த்தம்



◆ **CHRIST** என்ற கிரேக்க வார்த்தைக்கு அபிஷேகிக்கப்பட்டவர் என்று அர்த்தம். மேசியா என்பதும் இவரே.

◆ **ALPHA AND OMEGA** முதல் மற்றும் கடைசி கிரேக்க எழுத்துக்கள், இது இயேசு ஆதியும் அந்தமுமாம் / முதலும் முடிவும் அவரே என பொருள்படும்.

ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை

## பேச்சில் மேன்மை இல்லை

**1 கொரி 2 : 1-5 சகோதரரே, நான் உங்களிடத்தில் வந்தபோது தேவனைப் பற்றிய சாட்சியை சிறந்த வசனிப்போடாவது ஞானத்தோடாவது அறிவிக்கிறவனாக வரவில்லை.**
(2)இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்க தீர்மானித்திருந்தேன்.
(3)அல்லாமலும் நான் பெலவீனத்தோடும், பயத்தோடும் மிகுந்த நடுக்கத்தோடும் உங்களிடத்தில் இருந்தேன்.
(4)உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில்
(5)என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும், பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது.



**போதகர்களின் இளவரசன்** என்று அழைக்கப்படும் **சார்லஸ் ஹேடன் ஸ்பர்ஜன்** என்பவர் ஞாயிற்றுக்கிழமை சபை ஆராதனையில் தான் போதித்த எளிமையான பிரசங்கத்தை எண்ணி வருத்தமுற தொடங்கினார்.தன்னை நினைத்து வெட்கப்பட்டார்.அவர் ஆலயத்திலிருந்து வெளியே சென்று **லண்டன்** பெருநகரத்தின் வாசஸ்தலத்திலிருந்து ஏதாவது நல்ல செய்தி வருமா என்று மனக்குழப்பத்தில் நின்று கொண்டிருந்தார்.வீட்டிற்கு வந்து சேர்ந்து முழங்காற்படியிட்டு கர்த்தாவே நீர் இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல காணப் பண்ணுகிற தேவன்.அந்த எளிய பிரசங்கத்தை ஆசீர்வதியும் என ஜெபித்தார்.

அந்த மாதத்திலே 41 பேர் அவரிடம் வந்து நாங்கள் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டோம், அதற்கு காரணம் நீங்கள் போதித்த அந்த பிரசங்கம்தான் என சொல்லிச் சென்றார்கள்.அடுத்த ஞாயிற்றுக்கிழமை தன்னுடைய முந்திய பிரசங்கத்தைக் காட்டிலும் மிகவும் பிரசித்தமான பெரிய பிரசங்கம் ஒன்றை சபையில் போதித்தார்.ஆனால் அதற்கு எந்தவிதமான பதிலும் ஒருவரிடமிருந்தும் வரவில்லை.

ஸ்பர்ஜனின் இந்த அனுபவம் இரு முக்கிய பாடங்களை நமக்கு அடிக்கோடிட்டு காட்டுகிறது.முதலாவது நம்முடைய முயற்சிகளினால் நாம் தேவனிடத்திலிருந்து ஆசீர்வாதத்தை கேட்கிறோம்.சங்கீத புஸ்தகத்தில் **சாலமோன் ராஜா** இவ்வாறு கூறுகிறார் கர்த்தர் வீட்டைக் கட்டாராகில் அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா –சங்கீதம் 127 : 1. இரண்டாவது நம்முடைய பெலவீனங்களே கர்த்தருடைய வல்லமையை செயல்பட விடாமல் தடுக்கிறது.

அப்போஸ்தலராகிய பவுல், அந்தபடி நான் பலவீனமாயிருக்கும்போதே
பலமுள்ளவனாயிருக்கிறேன்; ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும்
பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும்,
இடுக்கன்களிலும் நான் பிரியப்படுகிறேன்.
(2 கொரி 12 : 10)

**தொடர்புக்கு:-**
ஆசிரியர்,
காஸ்பல் ட்ருத்
2/227 – கோலார்பட்டி
பொள்ளாச்சி - வட்டம்
தென் இந்தியா - 642 107

The Editor,
Gospel Truth,
2/227 - Kolarpatti
Pollachi -Taluk
South India - 642 107.

Email :
editor@thegospeltruth.org

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

Tamil Editor : W.S.Vedha,2/227 Kolarpatti, Pollachi -Tk,South.India - 642 107.
Phone : 04259 - 280488 Cell: 95975 62641
Publisher : V.Jayanathan Gnanarajan, Mailing : V.Selvam, Despatch : V.J.Sam kirubaharan
Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316